[Limited Sharing]

ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை

+94 11 2477424 / +94 11 2477423 +94 11 2346257

communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

| | |
|---|---|
| வெளியிடுபவர் | புள்ளிவிபரத் திணைக்களம் |
| திகதி | 2023.02.15 |

# இலங்கை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் (கொ.மு.சு) – 2023 சனவரி

**2023 சனவரியில் பணிகள் நடவடிக்கைகள் சிறிதளவு விரிவடைந்த அதேவேளை தயாரித்தல் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக சீர்குலைந்ததை கொள்வனவு முகாமையாளர் சுட்டெண்கள் எடுத்துக்காட்டின.**

**தயாரிப்பு கொள்வனவு முகாமையாளர் சுட்டெண், 2023 சனவரியில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் தயாரிப்பு நடவடிக்கைகளில் தொடர்ச்சியான பின்னடைவினை சமிக்ஞைப்படுத்தியது.** அதற்கமைய, நிரம்பலர் விநியோக நேரம் தவிர, அனைத்து துணைச் சுட்டெண்களிலும் வீழ்ச்சிகளினால் தூண்டப்பட்டு, முன்னைய மாதத்திலிருந்து 4.0 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட வீழ்ச்சியுடன் தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2023 சனவரியில் 40.8 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்தது.

புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் வீழ்ச்சிக்கு குறிப்பாக, உணவு மற்றும் குடிபானங்கள், புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட குறைவடைந்த கேள்வி நிலைமை பிரதான காரணமாக அமைந்தது. திசெம்பர் பண்டிகைப் பருவகாலத்தைத் தொடர்ந்து, கேள்வியில் ஏற்பட்ட பருவகால வீழ்ச்சிக்கு மேலதிகமாக நுகர்வோரின் கொள்வனவு சக்தி சீர்குலைந்தமையினை பிரதான காரணமாகக் கொண்டு கேள்வியில் தாம் குறிப்பிடத்தக்க வீழ்ச்சியொன்றினை எதிர்கொண்டதாக உணவு மற்றும் குடிபானத் துறையில் ஈடுபடும் பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். பிரதான ஏற்றுமதி அடைவிட நாடுகளில் ஏற்பட்ட மெதுவடைதலுக்கு மத்தியில் ஏற்றுமதி கேள்வி குறைவடைந்து காணப்பட்டு தொழிற்சாலைகள் கணிசமாக முழுமையான இயலளவுக்குக் கீழ் இயக்குவதற்கு தம்மை நிர்ப்பந்தித்ததாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைத் துறையைச் சேர்ந்தவர்கள் போன்ற ஏற்றுமதியை நோக்காகக் கொண்ட தயாரிப்பாளர்கள் குறிப்பிட்டனர். அதேவேளை, புதிய கட்டளைகள் மற்றும் உற்பத்தி என்பனவற்றில் வீழ்ச்சிக்கு அமைவாக தொழில்நிலை மற்றும் கொள்வனவுகளின் இருப்பு என்பனவும் வீழ்ச்சியடைந்தன. கையிருப்பிலுள்ள பொருட்கள் அதிகரிப்புடன் பொருள் கொள்வனவுகளை தாம் வேண்டுமென்றே குறைத்துக்கொண்டனர் என பல பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர். மேலும், முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் மாதத்திற்கு மாதம் அடிப்படையில் 2023 சனவரியில் நிரம்பலர் விநியோகநேரம் நீட்சியடைந்தது.

| மாறி | திசெ 2022 | சன 2023 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **44.8** | **40.8** | **-** | **வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில்** |
| | | கொ.மு.சு. துணைச் சுட்டெண்கள் | | |
| புதிய கட்டளைகள் | 45.5 | 38.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| உற்பத்தி | 40.5 | 37.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில்நிலை | 44.5 | 41.0 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| கொள்வனவுகளின் இருப்பு | 41.9 | 35.5 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிரம்பலர்களின் விநியோக நேரம் | 53.0 | 55.0 | + | நீட்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |


மூலம்: இலங்கை மத்திய வங்கி

செலவிடத்தக்க வருமானத்தில் வீழ்ச்சிக்கு மத்தியில் எதிர்வருகின்ற பண்டிகைப் பருவகாலப் பகுதியில் கேள்வியில் அதிகரிப்பினை எதிர்பார்த்து அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தயாரிப்பு நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் மேம்பாடொன்றினைக் காண்பித்தது.

**தயாரிப்பு கொ.மு.சு 40.8**

**2023 சனவரி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - தயாரிப்பு




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: தயாரிப்பு கொ.மு.சு***

உலகளாவிய தயாரிப்பு கொ.மு.சுட்டெண் 2022 திசெம்பரிலிருந்து 0.4 சுட்டெண் புள்ளிகளைக் கொண்ட அதிகரிப்புடன் 2023 சனவரியில் 49.1 பெறுமதியினைப் பதிவுசெய்தது.

முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் சிங்கப்பூரின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் உயர்வான வேகத்தில் அதிகரித்த அதேவேளை, இந்தியா மற்றும் ரஷ்யா ஆகிய நாடுகளில் இச்சுட்டெண் மெதுவான வீதத்தில் அதிகரித்துள்ளது. எனினும், யூரோவலயம், ஐக்கிய இராச்சியம், ஐக்கிய அமெரிக்கா மற்றும் சீனா ஆகிய நாடுகளின் தயாரித்தல் கொ.மு.சுட்டெண் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் சீர்குலைந்தது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[1], 2023 பெப்புருவரி 14இல் உள்ளவாறு*

*1 எஸ் அன்ட் பி குளோபல் நிறுவனமானது உலகளாவிய கொ.மு.சுட்டெண் தொகுப்பாளராக இனங்காணப்பட்டுள்ளதுடன் 30இற்கும் மேற்பட்ட நாடுகளுக்கும் யூரோ வலயம் உள்ளடங்கலாக முக்கிய பிராந்தியங்களுக்கும் கொ.மு.சுட்டெண்ணை தொகுக்கின்றது.*

**பணிகள் கொ.மு.சுட்டெண், 2023 சனவரியில் 50.2 சுட்டெண் பெறுமதியினைப் பதிவுசெய்து அடிப்படையளவு மட்டத்திற்கு சற்றுமேல் காணப்பட்டது.** புதிய வியாபாரங்கள், தொழில் நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கைக்கான எதிர்பார்க்கைகள் துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட மேம்பாடுகள் மூலம் இவ்வதிகரிப்பு துணையளிக்கப்பட்டிருந்தது.

புதிய வியாபாரங்கள் குறிப்பாக, நிதியியல் பணிகள், கல்வி மற்றும் உண்மைச் சொத்து துணைத் துறைகளில் அவதானிக்கப்பட்ட அதிகரிப்புக்களுடன் 2022 திசெம்பருடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் விரைவான வேகத்தில் மேம்பட்டன.

பணிகள் துறையிலுள்ள தொழில் நடவடிக்கைகள் 2023 சனவரியில் மெதுவான வேகத்தில் தொடர்ந்தும் அதிகரித்தன. அதற்கமைய, நிதியியல் பணிகள், கல்வி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் துணைத் துறைகள் மாதகாலப்பகுதியில் மேம்பாடுகளைக் காண்பித்தன. மேலும், சுற்றுலாப்பயணி வருகைகளில் அதிகரிப்பிற்கிசைவாக ஏனைய தனிப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் தங்குமிடம், உணவு மற்றும் குடிபானங்கள் துணைத் துறைகளுடன் தொடர்புடைய தொழில் நடவடிக்கைகளில் சில மேம்பாடுகள் காணப்பட்டன. எனினும், பருவகாலம் கடந்தமை அத்துடன் குறைவடைந்த நுகர்வோரின் கொள்வனவு சக்தி என்பவற்றுக்கு மத்தியில் மொத்தவிற்பனை மற்றும் சில்லறைவர்த்தகத் துணைத் துறைகளுடன் தொடர்புபட்ட தொழில்நடவடிக்கைகள் மாதகாலப்பகுதியில் தொடர்ந்தும் சீர்குலைந்தன. மேலும், சரக்கு அளவில் குறிப்பாக புடவைகள் மற்றும் அணியும் ஆடைகள் துறையில் குறைவடைதல் காரணமாக போக்குவரத்து துணைத் துறையும் வீழ்ச்சியடைந்தது.

மாதகாலப்பகுதியில் ஏற்பட்ட பதவி விலகுதல்கள், புலம்பெயர்வுகள் மற்றும் ஓய்வுபெறுதல்கள் காரணமாக தொழில்நிலை சனவரியில் விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தது. நிலுவையிலுள்ள பணிகளும் மாதகாலப்பகுதியில் விரைவான வேகத்தில் வீழ்ச்சியடைந்தன.


| மாறி | திசெ 2022 | சன 2023 | +/- | சுருக்கம் |
|---|---|---|---|---|
| **கொ.மு.சு** | **51.6** | **50.2** | **-** | **அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில்** |
| | | **<u>கொ.மு.சு துணைச் சுட்டெண்கள்</u>** | | |
| புதிய வியாபாரங்கள் | 52.0 | 56.0 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |
| தொழில் நடவடிக்கை | 54.0 | 51.5 | - | அதிகரிக்கின்றது, மெதுவான வீதத்தில் |
| தொழில்நிலை | 45.5 | 39.4 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நிலுவையிலுள்ள பணி | 47.4 | 44.1 | - | வீழ்ச்சியடைகின்றது, உயர்வான வீதத்தில் |
| நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள் | 59.0 | 60.1 | + | அதிகரிக்கின்றது, உயர்வான வீதத்தில் |

மூலம்: இலங்கை மத்திய வங்கி

எதிர்வரவுள்ள பண்டிகைப் பருவகாலத்திற்கு மத்தியில் அடுத்துவரும் மூன்று மாதங்களுக்கான தொழில் நடவடிக்கைகளுக்கான எதிர்பார்க்கைகள், தொடர்ந்தும் மேம்பட்டன. பொருளாதார நிலைமைகளில் மேம்பாடுகள் பற்றிய சாதகமான எண்ணப்பாங்குகளும் எதிர்பார்க்கைகளை மேலும் உயர்த்தின. எதுஎவ்வாறிருப்பினும், புதிய வரிக் கட்டமைப்பு மற்றும் முன்மொழியப்பட்ட மின்சாரக் கட்டண உயர்வு என்பவற்றுடன் சேர்த்து குறைவடைந்த கொள்வனவு சக்தி தமது எதிர்கால நடவடிக்கைகளுக்கு ஊறுவிளைப்பதாக சில பதிலிறுப்பாளர்கள் குறிப்பிட்டனர்.

**பணிகள்**
**கொ.மு.சு 50.2**
**2023 சனவரி**

கொள்வனவு முகாமையாளர் சுட்டெண் - பணிகள்




மூலம்: இலங்கை மத்திய வங்கி

***உலகத் தோற்றப்பாடு: பணிகள் கொ.மு.சு***

உலகளாவிய பணிகள் கொ.மு.சு, 2022 திசெம்பரின் 48.1 இலிருந்து 2023 சனவரியில் 50.1 இற்கு உயர்வடைந்து உலகளாவிய பணிகள் நடவடிக்கைகளில் விரிவடைதலினைச் சமிக்ஞைப்படுத்தியது.

சீனா, இந்தியா மற்றும் யப்பான் ஆகிய நாடுகளின் பணிகள் கொ.மு.சுட்டெண்கள் முன்னைய மாதத்துடன் ஒப்பிடுகையில் 2023 சனவரியில் அந்நாடுகளின் பணிகள் துறைகள் விரிவடைந்தன எனக் காண்பித்த அதேவேளை ஐக்கிய இராச்சியம் மற்றும் ஐக்கிய அமெரிக்கா ஆகிய நாடுகளில் இச்சுட்டெண் அவற்றின் பணிகள் நடவடிக்கைகளில் சீர்குலைவொன்றினை எடுத்துக்காட்டியது.

*மூலம்: எஸ் அன்ட் பி குளோபல்[i], 2023 பெப்புருவரி 14 அன்று உள்ளவாறு*

**தொழில்நுட்பக் குறிப்பு:**

**சுட்டெண்**

கொ.மு.சுட்டெண்ணானது “வியாபித்தல் சுட்டெண்ணாக” கணிக்கப்படுகிறது. இங்கு இது 0 மற்றும் 100 இற்குமிடையிலான பெறுமதியினைக் கொண்டிருக்குமிடத்து.

கொ.மு.சு=50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது நடுநிலையில் காணப்படுகிறது.
கொ.மு.சு >50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக விரிவடைகிறது.
கொ.மு.சு <50 மாதத்திற்கு மாத அடிப்படையில் துறையானது பொதுவாக வீழ்ச்சியடைகிறது.

**மாதிரி**

மாதிரிக் கட்டமைப்பானது ஊ.சே.நிதியத் திணைக்களத்திலிருந்து பெறப்பட்ட மேல் மாகாணத்தில் அமைந்துள்ள பாரிய கம்பனிகளின் பட்டியலை அடிப்படையாகக் கொண்டுள்ளது. தயாரிப்பு மற்றும் பணிகள் நடவடிக்கைகளுக்கான மாதிரிகள் ஒவ்வொன்றிற்குமான குறைந்தபட்சம் 100 பதிலிறுப்புக்களைக் கொண்ட இலக்குகளுடன் மொ.உ.உற்பத்திகளின் துறைவாரியான பங்குகளின் அடிப்படையில் தெரிவுசெய்யப்பட்டன.

**மாறிகளின் வரைவிலக்கணங்கள்:**

| | |
|---|---|
| தொழில்நிலை | : நிறுவனத்தில் பணியாற்றும் அலுவலர்களின் எண்ணிக்கை |
| கொள்வனவுகளின் இருப்பு | : உற்பத்திக்குப் பயன்படுத்துவதற்காக கொள்வனவு செய்யப்பட்டு களஞ்சியசாலையில் வைக்கப்பட்டுள்ள மூலப்பொருட்கள் |
| நிரம்பலர் வழங்கல் நேரம் | : கட்டளை வழங்கப்பட்டமைக்கும் நிரம்பலர்களினால் பொருட்கள் வழங்கப்பட்டமைக்குமிடையிலான நேர வேறுபாடு |
| நிலுவையிலுள்ள பணிகள் | : வியாபார நடவடிக்கையின் அதிகரித்த பாய்ச்சலின் காரணமாக [illegible] |